International
Labour
Organization



பணிபுரிவதற்கான கண்ணியமான நிலைமை
பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு





# மீன்பிடிப்பில் பணி மரபு எண். 188

## பரிந்துரை எண். 199



# மீன்பிடிப்பில் பணி புரிதல் மரபு மற்றும் பரிந்துரைகள்

உலக அளவில் மீன்பிடிப்பு மற்றும் பிடிக்கப்பட்ட மீன்களுக்கான வர்த்தகம் அதிகரித்துள்ளதை சமீப வருடங்களில் காண்கிறோம். மீன்பிடிப்பில் தொழில்நுட்பம் விரைவாக மாறி வருகிறது. அவ்வாறே அடிக்கடி மீன்பிடிப்பு நடைபெறும் வழிமுறைகள் மாற்றப்படுகிறது. இத்தகைய மாற்றங்கள் உலக அளவில் தொழிலாளர் வரைமுறைக்கு அழைப்பு விடுக்கிறது. இந்த வரைமுறை அனைத்து மீன் பிடிப்போருக்கும் (மீனவர், ஆண் மற்றும் பெண் இருவரும்) பொருத்தமானதாக இருக்க வேண்டும். இத் தொழிலாளர்கள் பன்னாட்டு பயணம் மேற்கொள்ளும் பெரிய கலன்களிலோ அல்லது கரைக்கு அருகில் உள்நாட்டிற்கு தொடர்புடைய நீர்ப்பகுதியில் இயக்கப்படும் சிறு படகுகளில் பணிபுரிபவர்களாக இருப்பர்.

மீன்பிடி மரபில் புதிய பதொநிறுவனத்தின் பணி, அதனைத் தொடரும் பரிந்துரைகள் இந்த வரை முறையை வழங்குகிறது. ஜூன் 2007ல் அபரிமிதமான ஆதரவுடன் இந்த மரபு நிறைவேற்றப்பட்டது. மீன்வளத் தொழிலில் எதிர் கொள்ளப்படும் நிலை மற்றும் சூழ்நிலைகளைத் தெரிவிக்கிறது. இந்த மரபு வளையும் தன்மை கொண்டது. ஆகையால் அனைத்து வர்த்தக ரீதியிலான மீன்பிடிப்பு வகைகளுக்கும் பொருத்தமானது. குறிப்பான சூழ்நிலை எதுவாயினும் உலகில் உள்ள அரசுகளால் இதனைச் செயல்படுத்த இயலும்.

மரபு பெற்ற உலகளாவிய ஆதரவிற்காக அடுத்த நிலை அரசுகளால் தேசீய சட்டமாக கட்டுப்பாடுகளாக அல்லது பிறமுறைகளாக மாற்றப்பட வேண்டியதேயாகும். முதல் 10 நாடுகள் (8 நாடுகள் கடற்கரையுடன் உள்ளவை) உறுதிப்படுத்திய 12 மாதங்களுக்குப் பிறகு மரபு அமுல்படுத்தப்படும்.

உலகம் முழுவதிலும் உள்ள மீன்பிடிப்போரின் பணி நிலையை மாற்றுவதற்கான ஆதாரத்தைக் கொண்ட முக்கியமான சட்ட கருவியைப் பற்றிய அதிக விபரங்களை இப்புத்தகம் வழங்குகிறது.

“நமது சந்தைக்கு உணவு கொண்டுவர மீன்வளப்பிரிவில் பெரும்பான்மையானோர் வழக்கத்திற்கு மாறான முன் அறிந்து கூற முடியாத இன்னல்களை எதிர்கொள்கின்றனர். வழக்கமாக கடுமையான நிலைமையில் நீண்ட நேரம் பணியாற்றுகின்றனர்”

— ஜுவான் சோமாவியா
தலைமை இயக்குநர் பதொநி

மீன்பிடி மரபில் பணிபுரிதல் என்பது ‘மீன்பிடிப்போரை’ குறிப்பிடுகிறது. மீன்பிடிகலனில் பணிபுரியும் ஒவ்வொருவரையும் குறிப்பிடுகிறது (எனினும் உதாரணமாக கலன் செலுத்துவோர், மீன்வளப் பார்வையாளர்கள் போன்ற குறிப்பிட்ட நபர்கள் இந்த வரையறையிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றனர்).

உலக அளவில் மீன்பிடிகலன்களில் பதினைந்து மில்லியனுக்கு மேற்பட்ட நபர்கள் முழுநேர பணிபுரிகின்றனர்.

# மீன்பிடிப்போருக்கு குறிப்பான பாதுகாப்பு ஏன் தேவைப்படுகிறது ?

பெருகி வரும் நிலையில் உள்ளூர் அளவில் பயன்படுத்தப்பட்ட மீன், தற்சமயம் பதப்படுத்தப்படுகிறது. உலகின் மறு பகுதியில் உபயோகப்படுத்துபவர்களுக்கும், உணவகங்களுக்கும் கப்பலில் அனுப்பி வைக்கப்படுகிறது.

மீன் இருப்பு குறைந்து வருகிறது என்பது சில மீன்பிடிப்போர் கடந்த காலத்தை விட கரையிலிருந்து மேலும் அதிக தூரத்திற்கு கூடுதலான இன்னல்களை உருவாக்கி கொண்டு துணிவான முயற்சியுடன் செல்கின்றனர் என்பதனை உணர்த்துகிறது.

''மீன்பிடிப்பு தனித்தன்மையான வாழ்க்கை முறை. இந்த புதிய மரபு இந்த தனித்தன்மையை மட்டும் அன்றி கருதத்தக்க அளவில் இடர் மற்றும் அபாயத்தை ஆண் மற்றும் பெண்களுக்கு வெளிப்படுத்தும் எப்பொழுதும் விரிவடைந்து வரும் பிரிவில் உலகமயமாதலுக்கான தேவைகளையும் பிரதிபலிக்கிறது''

– கேப்டன் நைஜெல் கேம்ப்பெல்
தென்ஆப்பிரிக்கா கடல்சார் பாதுகாப்பு ஆணையம்.
பன்னாட்டு தொழிலாளர் அமைப்பின் 96வது அமர்வில் மீன்பிடிப்பு பிரிவின் குழு தலைவர்.

மீன்பிடி மரபில் பணிபுரிதல் மீன்வளத்தொழிலின் குறிப்பிடத்தக்க தன்மைகளையும் அவர்களின் அன்றாட பணியில் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளையும் பிரதிபலிக்கும் வகையில் பொருத்தப்படுகிறது.

பிற பிரிவில் பணிபுரிவோரின் அனுபவத்திலிருந்து மாறுபடும் வகையிலான பணி நிலையினை மீன்பிடிப்போர் பெற்றுள்ளனர். பிற தொழில் புரிபவர்களைக் காட்டிலும் மீன்பிடிப்போருக்கு ஆபத்து விகிதம் குறிப்பாக பல மடங்கு அதிகமாக உள்ளது. தீ அணைப்பு, சுரங்கப்பணி போன்றவற்றுடன் ஒப்பிடும் பொழுது மீன்பிடிப்பு பணி இன்னல் மிகுந்தது.

பணிநேரம் மற்றும் தனிப்பட்ட நேரம் ஆகியவற்றிற்கு இடையே தெளிவான பிரிவினை பல வேலைகளில் இல்லை. பெரும்பான்மையான மீன்பிடிப்போர் நெருக்கமான மற்றும் சீர் கேடான நிலையில் கலன்களிலேயே பணிபுரிகின்றனர் மற்றும் வாழ்க்கை நடத்துகின்றனர். நீண்ட நாட்களுக்கு வீட்டை விட்டு அப்பால் இருக்கின்றனர். மிகவும் நீண்ட நெடுநேரம் பணிபுரிகின்றனர். பணியில் இல்லாது இருக்கும் பொழுது போதிய உணவு குடிதண்ணீர் அவ்வாறே பொழுதுபோக்கு வசதிகள் போன்றவற்றிற்கான வழி ஒரு பிரச்சினையே. நீண்ட நேர பணியினால் ஏற்படும் தளர்வு ஆபத்தான பிரச்சினையாக அடையாளப்படுத்தப்படுகிறது.

மீன்பிடிப்பு பிரிவை வேறுபடுத்தும் பிற பண்புகளும் உள்ளன. உதாரணமாக நிலையான சம்பளத்தைப் பெறுவதைவிட கலன்களில் பிடிக்கப்படும் மீன்களின் மதிப்பின் பங்கு அடிப்படையில் மீன் பிடிப்பவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. மரபு வழி உணர்வில் மீன்பிடிப்போர் பணியாளர்கள் அல்ல. அதிக எண்ணிக்கையில் சொந்தமாக இயக்குபவர்கள் அல்லது சுய வேலைவாய்ப்பில் உள்ளவர்களாக கருதப்படுபவர்களாவர். கரையில் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் ஆகியோருக்காக அமைக்கப்பட்ட முறைகள் இவர்களுக்கு பொருத்தமாகவோ அல்லது திறனுள்ளதாகவோ இருக்காது. இவ்வாறு மீன்பிடிப்பவர்களுக்கு ''கண்ணியமான பணி இல்லாமை''க்கு வழிவகுக்கிறது.

# மீன்பிடி மரபில் பணியால் உள்ளடக்கப் படுபவர்கள் யார் ?

மீன்வகைக்கும் நாட்டிற்கும் ஏற்றபடி மேற்கொள்ளப்படும் மீன்பிடிப்பு முறை மிகவும் வேறுபடுகிறது. தீவிரமான நிலையில் உள்ளவை வர்த்தக ரீதியிலான பெரிய கலன்களாகும்: 1000 டன் எடைக்கு அதிகமான, சரக்கு ஏற்றிச் செல்லும் சில கப்பல்களைப் போல் பெரிதான 2500க்கு மேற்பட்ட கலன்களில் 150 000 மீன்பிடிப்போர் பணிபுரிகின்றனர். எனினும் பெரும்பான்மையானவை சிறிய கலன்களே (சில நேரங்களில் மிகவும் சிறியவை) ஆகும். 100 டன் எடைக்கு குறைவாக உள்ள கலன்களில் 5.5 மில்லியன் மீன்பிடிப்போரும் மற்றும் 4 மில்லியன் மீன்பிடிப்போர் இயந்திரத்தைக்கொண்ட திறந்த (தளமற்ற) கலன்களிலும் பணிபுரிவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சுமார் 5 மில்லியன் மக்கள் இயந்திரமற்ற திறந்த படகுகளில் தங்களது பிழைப்பை மேற்கொள்கின்றனர். வேறுவழியில் இதனைக் காணும் பொழுது 90 சதவிகிதத்திற்கு மேற்பட்டோர் 24 மீட்டர் நீளத்திற்கு குறைவான கலன்களிலேயே பணிபுரிகின்றனர்.

இத்தகைய அனைத்து வெவ்வேறு வகையான வர்த்தக ரீதியிலான மீன்பிடிப்பு மீன்பிடி மரபில் உள்ள பணியால் உள்ளடக்கப்படும். பிழைப்பு மற்றும் பொழுது போக்கிற்கான மீன்பிடிப்பு மட்டும் குறிப்பாக விலக்கப்படுகின்றன.

மீன்பிடிப்போர் பணியாற்றும் சூழ்நிலை பரந்த எல்லையை உடையது என்பதால் மரபு வளையக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளது. உதாரணமாக, மரபின் சில பகுதிகள் 24 மீட்டருக்கு மேல் நீளம் உடைய கலன்கள் அல்லது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களுக்கு கடலில் தங்கும் கலன்களுக்கு மட்டுமே பொருத்தமானதாகும்.

உலகளவில் மீன்வளத் தொழிலில் குறிப்பாக ஆசியா குறிப்பாக முக்கியத்துவம் பெறுகிறது. உலகில் மீன்பிடிப்பவர்களில் 80 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் ஆசியாவில் இருந்தே வருகின்றனர்.



# மீன்பிடிப்பு மரபில் பணிக்கான பின்னணி

ஜெனிவாவில் ஜூன் 14, 2007ல் நடைபெற்ற பன்னாட்டு தொழிலாளர் நிறுவனத்தின் (பதொநி) வருடாந்திர கூட்டத்தில் மீன்பிடிப்பில் பணி மரபு (பதொநி மரபு 188) அனுமதிக்கப்பட்டது. ஆதரவாக 437 எதிர்த்து 2 வாக்குகள் வராதோர் 22 என்ற வகையில் வாக்களிப்பு இருந்தது.

மீன்பிடிப்பு தொழிலில் நேரடியான தொடர்பு உடையவர்களுக்கு இடையே விவாதம் மற்றும் ஒப்பந்தம் போன்ற முறைகளின் உச்ச நிலையை வாக்கு எடுத்துரைத்தது– பதொநி மூன்று பகுதிகளான அமைப்பிற்கு இணங்க, அரசு பிரதிநிதிகள், (பதொ நிறுவனம் 180 உறுப்பினர் நாடுகளைக் கொண்டுள்ளது) பணிபுரிவோர் (மீன்பிடிகலன்களின் உரிமையாளர்கள்) மற்றும் மீன்பிடிப்போர் ஆகியோரை விவாதம் உள்ளடக்கியது. 2001ல் தொடங்கப்பட்ட முந்தைய பதொநிறுவன வருடாந்திர கூட்டங்களின் விவாதங்கள் நீண்டகால ஆராய்ச்சி மற்றும் பிரதிபலிப்பை 2007 வாக்களிப்பு முழுமையாக முடித்தது.

மேலே தெரிவித்தவாறு மீன்பிடிப்பில் பணி மரபு , பத்து உறுப்பினர் நாடுகளின் அவற்றில் எட்டு நாடுகள் கடற்கரையைக் கொண்டவை அங்கீகாரம் பெற்ற பிறகு ஒராண்டிற்குள் அமுலுக்கு வரும். அங்கீகாரம் அளிப்பதற்காக தேர்வான உறுப்பினர் நாடுகள் மீது மரபு சட்டப்படியான பிணைப்பை ஏற்படுத்தும்.

2007 கூட்டம் மீன்பிடிப்பு பரிந்துரைகளில் பணி (பரிந்துரை 199) என்ற ஈடு செய்யும் பணிக்கும் சம்மதம் தெரிவித்தது. மரபின் பகுதிகளை எவ்வாறு செயல்படுத்துவது என்பதற்கு வழிகாட்டுதலை பரிந்துரை நாடுகளுக்கு வழங்குகிறது. இப்பிரிவில் பதொ நிறுவன நடவடிக்கைகளுக்கு மேலும் வழி காட்டுவதற்காக பிணைப்பற்ற பல முடிவுகளைக் கூட்டம் ஏற்றுக் கொண்டது.





மீன்பிடிப்பு பிரிவில் தொழிலாளர் நிலையை உள்ளடக்கிய பதொநிறுவன முந்தைய சாதனங்களை (1920, 1959 மற்றும் 1966லிருந்து) மரபு மற்றும் பரிந்துரைகள் மாற்றி அமைத்தன. தற்கால உலகளாவிய வர்த்தக மீன்பிடிப்பின் தன்மையை இனியும் பிரதிபலிக்க பழமையானவையாக இவை கருதப்பட்டன. பழைய மரபுகளை அங்கீகரித்த நாடுகள், புதிய மரபுகளை அங்கீகரிக்கும் வரை அவற்றின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தொடர்ந்திருக்கும். (பழைய மரபுகளை அங்கீகரிக்காத நாடுகள் 2007 மீன்பிடிப்பில் பணி மரபை அங்கீகரிக்கும்)

மரபின் நோக்கம் மீன்பிடிப்போர் உலக அளவில் கண்ணியமான பணியைப் பெற்றுள்ளனர் என்பதனை பரவலாக அங்கீகரிக்கப்படும் தற்கால சட்ட சாதனம் மூலம் உறுதி செய்வதேயாகும்.

# மீன்பிடிப்பு மரபில் பணி என்பதன் கீழ் **என்ன பாதுகாப்பு வழங்கப்படுகிறது?**

ஆண்கள் மற்றும் பெண்கள் கண்ணியமான வேலை பெறுதல் மற்றும் சுதந்திரம் நாணயம், பாதுகாப்பு மற்றும் மனிதநேயம் உள்ள நிலையில் ஆக்கபூர்வமான பணிசெய்தல் ஆகியவற்றிற்கான வாய்ப்புகளை மேம்படுத்த பதொ நிறுவனம் அர்ப்பணித்துக் கொள்கிறது. உரிமைகள் பாதுகாக்கப்படும். போதிய வருமானம், போதிய சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை ஏற்படுத்தும் ஆக்கப் பூர்வமான பணி என்பதனை கண்ணியமான வேலை என்பது தெரிவிக்கிறது. அனைத்து பணியாளர்களைப் போன்று மீன்பிடிப்போரும் கண்ணியமான பணிக்கு உரிமை உடையவர்களாவர்.

மீன்பிடி கலன்களில் கண்ணியமான பணி என்பதனை உறுதி செய்ய முக்கியமான பிரச்சினைகளை மரபு தெரிவிக்கிறது. உதாரணமாக அதற்கு தேவைப்படுபவை:

- மீன்பிடிகலன் உரிமையாளர்கள் மற்றும் செலுத்துவோர்களுக்கு கலனில் உள்ள மீன்பிடிப்போர் மற்றும் கலன்களின் பாதுகாப்பிற்கான பொறுப்பை நிறுவுதல் (கட்டுரை 8);
- மீன்பிடி கலன்களில் பணியாற்ற குறைந்த பட்ச வயதை தீர்மானித்தல் மற்றும் மீன்பிடிப்போரில் இளையவர்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு (கட்டுரை 9) ;
- மீன்பிடிகலன்களில் பணியாற்ற தகுதிக்கான மருத்துவ சோதனைக்கு மீன்பிடிப்போரை காலமுறைப்படி உள்ளாக்குதல் (கட்டுரை 10–12) ;
- போதியவாறு திறமையாக மீன்பிடி கலன்கள் நிர்வகிக்கப்படுதல் (ஓட்டுநர்) தகுதியான செலுத்துபவரின் கண்காணிப்பில் வைத்திருத்தல் மற்றும் கலனில் மீன்பிடிப்போருக்கு போதிய ஓய்வு அளித்தல் (கட்டுரை 13–14) ;
- மீன்பிடிகலனில் அவர்கள் மேற்கொள்ளும் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகள் கையொப்பமிடப்பட்ட பணி ஒப்பந்தம் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக இயக்குபவர் மற்றும் மீன்பிடிப்போர் பட்டியல் (கட்டுரை 15–20, மற்றும் இணைப்பு II) ;
- மீன்பிடிப்போரை அவர்களின் ஒப்பந்தம் முடிவுறும் நிலையில் மற்றும் பிற காரணங்களுக்காக, திருப்பி அனுப்புதல், மீன்பிடிப்போர் பணி பெற பணம் பெறுவதைத்தடுத்தல் அல்லது பணம் கொடுக்காதவரை பட்டியல் படுத்துவதைத் தவிர்த்தல் (கட்டுரை 21–22) ;
- மீன்பிடிப்போருக்கு எவ்வாறு பணம் வழங்கப்பட வேண்டும் என்பதனைத் தெரிவித்தல் மற்றும் செலவின்றி பணத்தை அவர்களது குடும்பத்திற்கு அனுப்பி வைக்க அவர்களுக்கு வழிமுறைகள் அமைத்தல் (கட்டுரை 23–24) ;
- கலனில் இருப்பிடம் மற்றும் உணவிற்கு தரம் நிர்ணயித்தல் (கட்டுரை 25–28, மற்றும் இணைப்பு II) ;
- பணி வழி பாதுகாப்பு மற்றும் நலத்திற்கான தேவைகளை நிறுவுதல் அவ்வாறே கலனில் அடிப்படையான மருத்துவ கவனிப்பை நிறுவுதல் (கட்டுரை 31–33) ;
- நாட்டில் பிற பணியாளர்களுக்கு வழங்கப்படும் அனுகூலங்களைப் போன்று சிறிதும் குறைவில்லாதபடி சமூக உத்திரவாத பாதுகாப்பில் மீன்பிடிப்போரும் பயன்பெறுதலை உறுதிசெய்தல் மற்றும் பணி தொடர்பாக ஏற்படும் உடல்நலக்குறைவு காயம் மற்றும் இறப்பு போன்ற நிகழ்வுகளில் குறைந்தபட்ச பாதுகாப்பு வழங்குதலை உறுதி செய்தல் (கட்டுரை 34–39).

சில முக்கிய கருத்துக்கள் மட்டும் விபரங்களுடன் மேலே குறிப்பிட்ட கட்டுரைகளில் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட கலன்களுக்கு அதிகமான தேவைகள் (மரபு வழங்குகிறது) (உ.ம். நீண்ட காலத்திற்கு கடலில் இருக்கும் பெரிய கலன்கள்) பிற கலன்களுக்கு (உ.ம். துறைமுகத்திற்கு அருகில் இயக்கப்படும் அல்லது குறைந்தகாலத்திற்கு கடலில் இருக்கும் சிறுகலன்கள்) விதி விலக்கு ஆகியவற்றை மரபு வழங்குகிறது. மரபின் தேவைகள் எவ்வாறு தொகுக்கப்பட வேண்டும் எவ்வாறு அமுலாக்கப்பட வேண்டும் என்பதனையும் தெரிவிக்கிறது (கட்டுரை 40–44)

இந்த சிறு வெளியீடு பின்வரும் பக்கங்களில் இக்குறிப்புகளில் சிலவற்றை ஆய்ந்து பார்க்கும்.



பல நாடுகளில் கடலோடிகளின் பணியின் நிலையைத் தெரிவிக்கும் சட்டம் மற்றும் கட்டுப்பாடுகள் கடல் மீன் பிடிப்போரின் பணி நிலையையும் ஒரு பகுதியிலேனும் தெரிவிக்கும். எனினும் மீன்பிடிப்போர் சந்திக்கும் பிரச்சினைகள் சரக்கு மற்றும் பயணிகளின் கப்பல்களில் பணிபுரியும் கடலோடிகள் சந்திக்கும் பிரச்சினைகளிலிருந்து மாறுபடும். இக் காரணத்தால் கப்பலில் பணியின் நிலை குறித்து தொடர்புடைய பதொநிறுவனத்தின் கடல்சார் தொழிலாளர் மரபு, 2006 (கதொம) அதன் பயன்முறையிலிருந்து மீன்பிடி கலன்களுக்கு விதிவிலக்கு அளித்தது. ஆகையால் கடலோடிகளுக்கான தேசீய சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு மாற்றங்களை ஏற்படுத்த விரும்பும் நாடுகள் கதொமரபையும் மற்றும் மீன்பிடிப்பில் பணி மரபு ஆகியவற்றையும் ஒன்றாக கருத்தில் கொள்ள விரும்புகிறது. ஆகையால் கடலோடிகள் மற்றும் கடலோரப் பகுதிகள் மற்றும் உள்நாட்டு நீர்நிலைப்பகுதிகளில் பணிபுரிவோர் உள்ளிட்ட மீன்பிடிப்போர் அன்றைய தேதி வரை சரிசெய்யப்பட்ட மற்றும் சுருக்கமான சட்டப் பாதுகாப்பை பெற்றுள்ளனர் என்பது உறுதி செய்யப்படுகிறது.

# மரபை நெருங்கி உற்று நோக்குதல்

கலனில் பணிபுரிதலுக்கான நிலைமைக்கு இறுதியான பொறுப்பு மீன்பிடிகலனின் உரிமையாளரைச் சாரும் என்பதனை மரபு தெளிவாக்குகிறது. இது வழங்குவதாவது:

✓ **கலனை செலுத்துபவருக்கு, மரபின் கடமைகளுக்கு இணக்கமாக இருப்பதற்குத் தேவையான ஆதாரங்கள் மற்றும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதனை உறுதி செய்வது மீன்பிடிகலனின் உரிமையாளரது முழுமையான பொறுப்பாகும்.**

செலுத்துபவர் (கலனின் பொறுப்பாளர்) அவரது அல்லது அவளது சொந்தப் பொறுப்புகளைப் பெற்றுள்ளார்.

✓ **கலனின் பாதுகாப்பான இயக்கம் மற்றும் கலனில் உள்ள மீன்பிடிப்போரின் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான பொறுப்பு செலுத்துபவரைச் சாரும்.**

கட்டுரை 8ல் பொறுப்புகள் பற்றி மேலும் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

மீன்பிடிப்பில் பணி மரபு பிற வேலைக்கான குறைந்தபட்ச வயது மற்றும் இள வயதினரைப் பாதுகாத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய பதொ நிறுவன வரையறைகளுக்கு இணக்கமாக உள்ளது. 1973 குறைந்தபட்ச வயது மரபு 1999 குழந்தை தொழிலாளர் மரபின் கொடுமையான வடிவமைப்பு ஆகியவையும் இதில் அடங்கும்.



முடிவாக, மீன்பிடிப்பவர்களும் அவர்களுக்கான பொறுப்புகளைக் கொண்டுள்ளனர் என்பதனை உணர்கிறது.

☑ **மீன்பிடிப்பவர்கள் செலுத்துபவரின் சட்டத்திற்குட்பட்ட ஆணைகளுக்கும் பயன்படுத்தப்படும் பாதுகாப்பு மற்றும் உடல்நலத்திற்கான முறைகளுக்கும் இணங்கி இருத்தல் வேண்டும்.**



# மரபை நெருங்கி உற்று நோக்குதல்

## யார் மீன்பிடிப்பவராக இருக்க முடியும் ?

மீன்பிடிப்பவர்களுக்காக குறைந்தபட்ச வயது வரையறையை மரபு நிறுவுகிறது.

☑ **கலனில் பணிபுரிவதற்கான குறைந்தபட்ச வயது 16 ஆக இருக்க வேண்டும்**

ஆனால் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் 15 வயதுடையோர் மீன்பிடிப்பவர்களாக பணிபுரியும் வாய்ப்பை மரபு அனுமதிக்கிறது.

உதாரணமாக பாதுகாப்பு மற்றும் உடல் நலம் தொடர்புடையவற்றில் சில நடவடிக்கைகளை ஒதுக்குவதற்கு மீன்பிடிப்பவர்களுக்கு குறைந்தது 18 வயதாகி இருக்க வேண்டும் என்ற சில சூழ்நிலைகளும் உள்ளன. இத்தகைய நடவடிக்கைகள் தேசீய அளவில் தீர்மானிக்கப்படுகின்றன. மீன்பிடிகலனின் உரிமையாளர்கள் மீன்பிடிப்போரின் பிரதிநிதிகள் ஆகியோருடன் விவாதித்து, தொடர்புடைய இன்னல்களை கணக்கில் கொண்டு இவை தீர்மானிக்கப்படுகின்றன.





# மருத்துவ சோதனைக்கான தேவை

மீன்பிடி படகுகளில் பணிபுரிய குறிப்பிட்ட அளவிலான தகுதி தேவை என்பதால், வழக்கமாக மீன்பிடிப்போர் தகுந்த மருத்துவச் சான்றிதழை வைத்திருக்க வேண்டும். சோதனைக்கு உள்ளாகும் மீன்பிடிப்பவரை மட்டும் அல்லாது கலனில் உள்ள பிற மீன்பிடிப்போரையும் பாதுகாக்க மருத்துவ சோதனை உதவுகிறது. மரபு வழங்குவதாவது:

✓ **பணியை மேற்கொள்ள தகுதி உடையவர் என்று சான்று ஒப்பமிடப்பட்ட தகுந்த மருத்துவச் சான்றிதழ் இல்லாது மீன்பிடிகலனில் எந்த ஒரு மீன்பிடிப்பவரும் பணிபுரிதல் கூடாது.**

24 மீட்டர் நீளத்திற்கு குறைவான கலனில் பணி புரியும் மீன்பிடிப்போருக்காக அல்லது கடலில் மூன்று நாட்களுக்கும் குறைவாக தங்கி மீன்பிடிப்போருக்காக சில சூழ்நிலைகளில் இத்தேவைக்கு விதி விலக்கு அளிக்கப்படும்.

மரபுக்கு புகழ் சேர்க்கும் மீன்பிடிப்பில் பணி பரிந்துரை நல்ல செய்முறைக்காக மிகவும் விரிவான அறிவுரையை வழங்குகிறது. மருத்துவ சோதனை தனிப்பட்ட நபரின் வயதையும் மற்றும் அவர் அல்லது அவள் மேற்கொள்ளும் பணியின் வகையையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுகிறது. கடலில் பணிபுரிபவர்களின் மருத்துவ தகுதி தொடர்பாக உலக சுகாதார நிறுவனம் மற்றும் பதொநி வகுத்துள்ள வழிகாட்டுதலை கவனத்தில் கொள்ளக் கோருகிறது.



# மரபை நெருங்கி உற்று நோக்குதல்

## இயக்குதல் மற்றும் பணிநேரம்


கடலில் நீண்ட நேரம் பணிபுரிதல் மற்றும் போதிய ஓய்வு இல்லாமை ஆகியவற்றால் ஏற்படும் சோர்வு போன்ற கடுமையான பிரச்சினையை மரபு தெரிவிக்கிறது. அது வழங்குவதாவது:

☑ **மீன்பிடி கலன்கள் போதியவாறு மற்றும் பாதுகாப்பாக தகுதிவாய்ந்த இயக்குபவரின் கட்டுப்பாட்டிற்குள் பாதுகாப்பான கடல் பயணம் மற்றும் கலனின் நடவடிக்கைகளுக்காக இயக்கப்பட வேண்டும்.**

அது மேலும் வழங்குவதாவது:

☑ **பாதுகாப்பு மற்றும் உடல் நலத்தை உறுதி செய்ய மீன்பிடிப்பவர்களுக்கு ஒழுங்காக தவறாது போதுமான அளவிற்கு ஓய்வு வழங்கப்பட வேண்டும்.**

பெரிய கலன்கள் போதிய எண்ணிக்கையில் தகுதி வாய்ந்த மீன்பிடிப்போரை ஏற்றிச்செல்லுதல் மரபுக்கு தேவையாகிறது. நீண்ட காலத்திற்கு கடலில் தங்கி இருக்கும் கலன்களுக்கு மிகவும் கடுமையான தேவைகளை வகுக்கிறது. மேலும் அவ்வாறு செய்வதில், கலனின் உடனடியான பாதுகாப்பிற்கு கலனில் உள்ள நபர்கள் அல்லது பிடிக்கப்பட்டவை ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக அல்லது ஆபத்தில் உள்ள பிற கலன்களுக்கு உதவிட மீன்பிடிப்போர் கூடுதலான நேரம் பணிபுரிதல் தேவையெனில் அதற்காக செலுத்துபவருக்கு அனுமதி வழங்குகிறது. அதன் பிறகு மீன்பிடிப்போர் நீண்டநேரம் அதிக ஓய்வு பெறவும் அனுமதிக்கலாம். மேலும், பணிபுரியும் நேரத்திற்காக வெவ்வேறான ஏற்பாடுகள், ஓய்வுநேரம், இயக்குதல் ஆகியவற்றை அனுமதிக்கிறது. மீன்பிடி கலன்களின் உரிமையாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் மீன்பிடிப்போர் ஆகியோரிடம் விவாதித்து உடல் நலம் மற்றும் பாதுகாப்பை அழித்து விடாத அளவிற்கு அனுமதிக்கிறது.



# பணி ஒப்பந்தங்கள் மற்றும் திருப்பி அனுப்புதல்

எந்த ஒரு தொழிலாளரும், அவர் ஈடுபடும் வேலையின் தொடர்புகளின் தன்மையை தெளிவாக அறிந்திருக்க வேண்டியது அவசியம் என்பதால் மரபு தூண்டுவதாவது:

✓ **கலனில் மீன்பிடிப்போர்... மீன்பிடிப்பு பணி ஒப்பந்த பாதுகாப்பு பெற்றுள்ளனர். அவர்களால் உணர்ந்து கொள்ளக்கூடியவை. இந்த மரபில் பகுதிகளுக்கு இணக்கமானவை.**

இந்த மரபின் பிற்சேர்க்கை அத்தகைய ஒப்பந்தத்தின் குறைந்தபட்ச விபரங்களைக் குறிப்பிடுகிறது.

உலக அளவில் பெருகி வரும் இந்தப் பிரிவில் ஒப்பந்தம் முடிவடையும் பொழுது அல்லது ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களால் வீட்டிற்கு திரும்ப வேண்டிய தேவையின் பொழுது வீட்டிலிருந்து வெகு தொலைவில் பணி புரிவதை மீன்பிடிப்போர் உணர்வர். அவர்களை திரும்ப அனுப்புவதற்கான உரிமைகளை மற்றும் எந்த சூழ்நிலையில் திருப்பி அனுப்பப்படுதல் வேண்டும் என்பதனை மரபு குறிப்பிடுகிறது. வழக்கமாக அத்தகைய திருப்பி அனுப்புதல் மீன்பிடிகலனின் உரிமையாளர் செலவில்தான் மேற்கொள்ளப்பட வேண்டும். மீன்பிடிகலனின் உரிமையாளர் அவர் அல்லது அவள் கடமைகளிலிருந்து தவறும் பொழுது குறிக்கிடுவது கொடிநாட்டின் கடமையென்றும், உரிமையாளரிடமிருந்து செலவினத்தை வசூலிப்பது நாட்டின் உரிமை என்றும் குறிப்பிடுகிறது.

தனியார் வேலை வாய்ப்பு நிறுவனங்கள் மீன் வளப்பிரிவில் மீன்பிடிப்போரை வேலைக்கு அமர்த்த பயன்படுத்தப்படுவது அதிகரித்து வருவதை மரபு கணக்கில் கொள்கிறது. பிறவற்றிற்கு இடையில், அத்தகைய ஒப்பந்தங்களில் மரபு குறிப்பிடும் கடமை மற்றும் பொறுப்புகளுக்கு இறுதியான பொறுப்பு மீன்பிடி கலனின் உரிமையாளரையே சாரும் என்பதனை தெளிவாக்குகிறது. (உ.ம். மீன்பிடிப்போருக்கு சம்பளம் வழங்குதல், அவர்களை திருப்பி அனுப்புதல், மருத்துவ கவனிப்பு) ஈடுபடும் மீன்பிடிப்போர் கலனுக்கு எதிரான உரிமையை உறுதிப்படுத்துவதிலிருந்து தடைசெய்யப்படுதல் கூடாது.

மரபின் இணைப்பு II மீன்பிடிப்போரின் பணி ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட வேண்டிய விபரங்களை தெரிவிக்கிறது. மீன்பிடிப்போருக்கு எவ்வாறு சம்பளம் வழங்கப்பட வேண்டும் (கூலியாகவோ அல்லது பிடிக்கப்பட்ட மீனின் பங்காகவோ அல்லது இந்த இரண்டையும் இணைத்தோ எவ்வாறு வழங்கப்படும்) வேலையிலிருந்து நிறுத்தி விடுவதற்கான நிபந்தனைகள், வருடாந்திர விடுமுறை அளவு, நோய்வாய்ப்படுதலுக்கு எதிராக பாதுகாப்பு, காயம் அடைதல் இறப்பு மற்றும் பிற இன்றியமையாத விபரங்கள் ஆகியவையும் இதனுள் அடங்கும்.



# மரபை நெருங்கி உற்று நோக்குதல்

## தங்கும் இட வசதி மற்றும் உணவு

மரபின் இணைப்பு III தங்குமிட வசதி குறித்த பிரச்சினைகளைத் தெரிவிக்கிறது. எவ்வாறு திட்டமிடப்பட வேண்டும் கட்டுப்படுத்தப்பட வேண்டும், வடிவமைப்பு, கட்டுமானம், படுக்கை அறை, மின்காப்பீடு, காற்றோட்டம், வெப்பம், வெளிச்சம், அதிர்வு மற்றும் நோயுற்ற காயமடைந்த மீன்பிடிப்போருக்கான வசதிகள் போன்றவற்றை குறிப்பிடுகிறது. சில நாடுகள் நீளத்தைவிட ஏற்றிச்செல்லும் மொத்த எடையைக் கொண்டு (உள்திறன்) கலன்களை கட்டுப்படுத்துவதை கணக்கில் கொள்கிறது.

மீன்பிடிப்பு பரிந்துரையில் பணி தங்குமிட வசதி குறித்த கூடுதலான விபரங்களை வழங்குகிறது.

பல மீன்பிடிப்பவர்களுக்கு, கலன் அவர்கள் பணிபுரியும் இடம் மட்டும்அல்லாது நீண்ட காலத்திற்கு அவர்கள் வாழும் இடமாக கடலில் தங்கி இருக்கும் பொழுது மட்டும் அன்றி சில நேரங்களில் துறைமுகத்தில் இருக்கும் பொழுதும் இருக்கும். கலனின் அளவுக்கு ஏற்றபடி முடிந்த அளவிற்கு சாதனங்கள் மற்றும் மீன்களை ஏற்றிச் செல்வதால் தங்கும் இட வசதியைக் குறைப்பதற்கான நிர்ப்பந்தம் கலனில் வளம் குன்றும் நிலைக்கு கொண்டு செல்லும்.

கலனை இயக்குபவர்கள் வசிக்க மீன்பிடி கலனில் போதிய அளவிற்கு இட வசதி இருக்க வேண்டும். மீன்பிடிப்போருக்கு போதுமான சுகாதார வசதிகள் இருக்க வேண்டும். தகுந்த தங்குமிட வசதி பாதுகாப்பு மற்றும் உடல் நலத்துடன் நேரடியான விளைவை ஏற்படுத்தும்.

எனினும் மரபு பெரிய கலன்களுக்கு எது பொருத்தமாக உள்ளதோ அது சிறிய கலன்களுக்கு அல்லது நீண்டநாட்களுக்கு கடலில் தங்காது இருக்கும் கலன்களுக்கு பொருந்தாது என்பதனை உணர்ந்துள்ளது. ஆகையால் மரபு வளையும் தன்மை கொண்டதாக உள்ளது: பெரிய கலன்களில் தூங்குவதற்கான அறைகளின் அளவை அமைக்கிறது. ஆனால் சிறிய படகுகளுக்கு குறிப்பிடப்படவில்லை. புதிதாக கட்டப்படும் கலன்களுக்கு மட்டுமே அறைகளின் அளவு பற்றிய தேவைகள் பொருந்தும். ஆனால் ஏற்கனவே இயக்கப்படும் கலன்களுக்கு இது பொருந்தாது.

கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு முக்கியமான பிரச்சினை உணவாகும். மரபு வழங்குவதாவது:

✓ **கலனில் கொண்டு செல்லப்படும் மற்றும் விநியோகிக்கப்படும் உணவு போதுமான ஊட்டச்சத்து மதிப்பு, தரம் மற்றும் அளவு கொண்டதாக (இருக்க வேண்டும்)**

குடிதண்ணீரும் போதுமான அளவில் மற்றும் தரத்தில் இருக்க வேண்டும் என்று மரபு குறிப்பிடுகிறது. உணவுக்கு யார் பணம் கொடுக்க வேண்டும் என்ற பிரச்சினையையும் தெரிவிக்கிறது.

# பாதுகாப்பு மற்றும் உடல்நலம்

மீன்பிடிப்போர் அவர்களது பணியின் விளைவாக குறிப்பிடத்தக்க அபாயங்களைச் சந்திக்கின்றனர். அபாயங்களில் உள்ளடங்குபவை: மீன்பிடிகலன் மூழ்கிவிடும் அல்லது நாசமடையும் வாய்ப்புக்கள்; கலனில் தீ மற்றும் வெடித்தல், கலனின் தளத்திலிருந்து அடித்து செல்லப்படுதல் அல்லது கலனின் இயக்கத்தால் அல்லது வழுக்குதலால் அல்லது இவை இரண்டினாலும் இடறிவிழுதல் மற்றும் கீழே விழுதல்; கனமான, ஆபத்தான அல்லது பாதுகாக்கப்படாத சாதனங்களில் வேலை செய்வதால் ஏற்படும் காயங்கள் (உ.ம். பாதுகாக்கப்படாத உருளைப் பொறி) வரையறுக்கப்பட்ட பகுதிகளில் பணிபுரிவதால் ஏற்படும் மூச்சுத்திணறல்; மற்றும் பிற பல இன்னல்கள்.

மீன்பிடிப்போர் குறிப்பான உடல்நலப் பிரச்சினைகளாலும் துன்புறுகின்றனர், அவையாவன: தோல் சம்மந்தமானவை, மற்றும் சுவாச நோய்கள், அல்லது அதிர்வு மற்றும் சத்தத்தால் ஏற்படும் விளைவுகள், மீன்கள் மற்றும் கடல்சார் உயிரினங்களைக் கையாள்வதால் ஏற்படும் ஒவ்வாமை மற்றும் உப்பு நீர்க்கட்டிகள் ஆகியவையும் வழக்கமாக ஏற்படக் கூடியவையே.

ஆகையால் மரபு, மீன்பிடிகலன்களில் இறுதியாக பாதுகாப்பான பண்பாட்டை மேம்படுத்த, உடல்நலம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளைத் தெரிவிக்க சட்டம், கட்டுப்பாடுகள் மற்றும் பிற முறைகளை நாடுகள் கொண்டுள்ளன என்பதனை உறுதிப் படுத்துகிறது.

இம்முறைகளில் இத்தகையவற்றில், மீன்பிடிப்போருக்கு, மீன்பிடி சாதனங்களைக் கையாள்வதில் போதிய அறிவுரை மற்றும் பயிற்சிக்கான தேவையை குறிப்பிடுகிறது. விபத்துக்கள் அறிவிக்கப்பட வேண்டும். புலனாய்வு செய்யப்பட வேண்டும். மீன்பிடி கலன்கள் மருத்துவ சாதனங்களைக் கொண்டு செல்ல வேண்டும். முதல் உதவி அளிப்பதில் பயிற்சி பெற்ற ஒருவரேனும் கலனில் இருக்க வேண்டும். கடுமையான காயம் அல்லது உடல்நலமற்று இருக்கும் பொழுது மருத்துவ சிகிச்சைக்காக தவறாது கரைக்கு கொண்டு செல்லப்படுவதற்கான உரிமையை மீன்பிடிப்போர் பெற்றுள்ளனர்.

கடலில் மூன்று நாட்களுக்கு மேல் தங்கி இருக்கும் மற்றும் பெரிய கலன்களுக்கு கூடுதலான முறைகள் உள்ளன.

மீன்பிடிப்போர் அவர்களது சொந்த பாதுகாப்பை உறுதி செய்ய அவர்கள் முக்கிய பங்கு ஆற்ற வேண்டும் என்பதனை மரபு உணர்ந்துள்ளது. இந்த இன்னல்களைக் குறைப்பதற்கான வழிமுறைகளுக்காக அடிக்கடி நிகழும் இன்னல்கள் மற்றும் அவற்றின் கடுமையை அடையாளம் காண்பதில் அவர்களது பங்கை உள்ளடக்குகிறது. அது வழங்குவதாவது:

✔ **மீன்பிடிப்போர் அல்லது அவர்களது பிரதிநிதிகளின் பங்கு பெறுதலுடன் உரியவாறு, மீன்பிடிப்பு தொடர்பான இடர்களின் மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும்.**

மீன்பிடிப்பு பரிந்துரையில் பணி மீன்வளப் பிரிவில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு குறித்த பிரச்சினைகள் மீது கூடுதலான வழிகாட்டுதலை வழங்குகிறது. இடர் மதிப்பீடு, பணிவழி பாதுகாப்பு மற்றும் உடல்நல மேலாண்மை அமைப்பு மற்றும் நாடுகளால் தெரிவிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு மற்றும் உடல் நலம் குறித்த தொழில் நுட்ப வரையறைகள் போன்றவற்றை வழிகாட்டுதல் உள்ளடக்கும். பதொநி மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (உவேஅ) பன்னாட்டு கடல்சார் நிறுவனம் (பகநி) மற்றும் உலக சுகாதார நிறுவனம் ஆகியவற்றுடன் (உசுநி) இணைந்து பதொநி வகுத்த பிற வெளியீடுகளுடன் வழிகாட்டுதல் தொடர்பு படுத்துகிறது.



# மரபை நெருங்கி உற்று நோக்குதல்

## சமூக உத்திரவாத பாதுகாப்பு

பணிதொடர்பான நோயுறுதல், காயமடைதல் அல்லது இறப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பை மீன்பிடிப்போருக்கு வழங்க நாடுகள் முறைகளை மேற்கொள்ள வேண்டும். பொருத்தமான மருத்துவ கவனிப்பு பெற மற்றும் பொருத்தமான இழப்பீடு பெற மீன்பிடிப்போருக்கு வழி இருத்தல் வேண்டும். மீன்பிடிகலன் உரிமையாளர்களின் பொறுப்பு என்பதனைப் போன்ற அமைப்பு அல்லது கட்டாய காப்புறுதி, தொழிலாளர்களின் இழப்பீடு அல்லது பிற திட்டங்கள் மூலமாக பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். நிறுவனங்கள் அல்லது உள்கட்டமைப்பு போதுமானதாக இல்லாத சில நாடுகளுக்கு சிறிதளவு வளையும் தன்மை வழங்கப்பட்டுள்ளது.

அத்தகைய தேசீய ஏற்பாடுகள் இல்லாத இடங்களில், உடல் நலம் பாதுகாப்பு மற்றும் மருத்துவ கவனிப்பு ஆகியவற்றை கலனில் பணிபுரியும் மீன்பிடிப்போருக்கு வழங்குவது மீன்பிடி கலனின் உரிமையாளரைச் சேரும்.



மீன்பிடிப்போர், அவர்களது பணியின் குறிப்பாக தன்மையின் காரணத்தால் பல நாடுகளில் பிற தொழிலாளர்களுக்கு கிடைக்கக்கூடிய சமூக உத்திரவாத பாதுகாப்பை பெற்றிருக்க வில்லை. இத்தகைய பாதுகாப்பின்மை மீன்பிடிப்போர் மற்றும் அவர்களது குடும்பங்களில் ஏழ்மைக்கு வழிவகுக்கிறது. சமூக உத்திரவாத பாதுகாப்பு கிடைக்கப் பெறாத மீன்பிடிப்போர் மீன் இருப்பு குறைந்து வரும் நிலையில் மீன்பிடிப்பை தாங்கள் தொடர வேண்டும் என கருதுவர்.

உலக அளவில் விரிவடையும் மீன்பிடிப்பிரிவின் தன்மை தங்களது சொந்த நாட்டின் கொடிகள் அல்லாது பிற கொடிகளைப் பறக்க விடும் கலன்களில் மீன்பிடிப்போருக்கு துயரங்களை ஏற்படுத்தும். வழக்கமாக இத்தகைய மீன்பிடிப்போர், அவர்களது சொந்த சமூக உத்திரவாத பாதுகாப்பு அமைப்பு அல்லது கொடிநாட்டின் அமைப்பு ஆகியவற்றிலிருந்து நன்மைகளைப் பெறவோ அல்லது வழங்கவோ இயலாது. கீழ்க்கண்டபடி உறுதி செய்ய அரசுக்காக ஒரு தேவையுடன் மரபு இப்பிரச்சினையை கையாள்கிறது.

✓ **பிற தொழிலாளர்களுக்கு பொருந்தத் கூடியவற்றிற்கு சிறிதும் குறையாத சாதகமான நிலையில் சமூக உத்திரவாதப் பாதுகாப்பில் இருந்து சாதாரணமாக அதன் எல்லைக்குட்பட்ட பகுதியில் மீன்பிடிப்போர் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போர் தேசீய சட்டத்தில் வழங்கப்பட்டபடி பயன் பெற உரிமை உள்ளவராவர்.**

மேலும் நாடுகள் ஒன்றாக, மீன்பிடிப்போர் அவர்களது தேசீயம் அல்லது இருப்பிடம் அவற்றைக் கருதாது, முழுமையான சமூக உத்திரவாதப்பாதுகாப்பை பெறும் நிலைக்காக இருவழி மற்றும் பலவழி ஒப்பந்தங்கள் மூலம் செயல்படுதல் வேண்டும்.

# பின் ஏற்பு செய்தல் மற்றும் செயல்படுத்துதல்

பதொ நிறுவனத்தின் அரசியலமைப்பு சட்டத்தைக் கருத்தில் கொண்டு, உறுப்பினர் நாடுகள், இப்பொருளை கவனிக்கும் ஆணையம் அல்லது அங்கீகாரம் உடையவர் முன்பாக மரபை கொண்டு வருதல் தேவைப்படுகிறது. சட்டம் அல்லது பிற நடவடிக்கையை அமுல்படுத்த மற்றும் பன்னாட்டு தொழிலாளர் அலுவலக தலைமை இயக்குநருக்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி தெரிவிக்க இது தேவைப்படுகிறது. பின் ஏற்பு என்பது தன்னார்வமானது.

மீன்பிடிப்பில் பணி மரபு வேண்டுமென்றே வளையும் தன்மை உடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதனை உயர்ந்தபட்ச எண்ணிக்கையில் நாடுகள் பின் ஏற்பு செய்ய ஏதுவாக இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. தேசீய சட்டம் மற்றும் கட்டுப்பாடுகள் அல்லது பிற முறைகள் (ஒன்றுபட்ட ஒப்பந்தங்கள் போன்ற) மூலமாக செயல்படுத்தப்படுதல் வேண்டும்.

மரபு முழுவதிலும் நீண்ட நாட்களுக்கு கடலில் தங்கும் அல்லது பெரிய கலன்களுக்கு பொருந்தக்கூடிய ஏற்பாடுகள் உள்ளன. குறைந்த கால மீன்பிடிப்பு பயணம் மேற்கொள்ளும் படகுகள் மற்றும் சிறிய படகுகள் ஆகியவற்றிற்கு குறைவான கேட்புடைய ஏற்பாடுகள் உள்ளன.


சில வகை படகுகள் அல்லது மீன்பிடி கலன்களை தொடக்கத்தில் தவிர்ப்பதை நாடுகள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். (உதாரணமாக, ஏரிகள், ஆறுகள் மற்றும் வாய்க்கால்கள் போன்ற உள்நாட்டு நீர்வளத்தில் மீன்பிடிக்கும் படகுகள்)

மீன்பிடிப்பில் பணி மரபு சில நாடுகளுக்கு அனைத்து தேவைகளையும் செயல்படுத்துவது கடினமாக இருக்கும் என்ற உண்மையை கருத்தில் கொள்கிறது. ஒரு வேளை அவற்றின் நிறுவனங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் போதியவாறு மேம்படுத்தப்படாது இருக்கலாம். மரபின் சில ஏற்பாடுகளை முன்னேற்றமான முறையில் செயல்படுத்த கட்டுரை 4 நாடுகளை அனுமதிக்கிறது.

பிற பதொநி மரபுகளுடன், மீன்பிடிப்பில் பணி மரபை பின் ஏற்பு செய்ய தேர்ந்தெடுக்கும் நாட்டிற்கு அதன் சொந்த சட்டங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் பிற முறைகளை அதுவும் குறிப்பாக மீன்பிடிப்பு தொழிலை பாதிப்பவற்றை மரபிற்கு ஏற்றபடி உள்ளன என்பதனை உறுதி செய்திட மறு ஆய்வு செய்யும் தேவை ஏற்படுகிறது.

தற்போதுள்ள அமைப்புகள் இணக்கத்தை உறுதி செய்யும் வகையில் இருக்க வேண்டும் என மரபு குறிப்பிடுகிறது. ஆய்வு, தேவைகளை அறிவித்தல், கண்காணிப்பு, புகார் செய்யும் முறைகள், அபராதம் விதித்தல் மற்றும் தொடர்பான முறைகள் என்ற வகையில் இவை இருக்க வேண்டும்.

பதொநி குறிப்பாக பன்னாட்டு தொழிலாளர் வரையறை துறை மற்றும் உலகம் முழுவதிலும் உள்ள பதொநிறுவன அலுவலகங்களில் உள்ள அவற்றின் பன்னாட்டு தொழிலாளர் வரையறை வல்லுநர்கள் மரபு மற்றும் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கான சட்டவரைவிற்கு உதவ வேண்டும்.




# கலந்தாய்வு மூலம் செயல்படுத்துதல்

பதொறி உறுப்பினர் நாடுகள் மரபு மற்றும் பரிந்துரைகளை மற்றும் அதன் ஏற்பாடுகளை எவ்வாறு செயல்படுத்துவது என்பது பற்றி விவாதிக்க கருத்தரங்கம் அல்லது செயல் பட்டறைகளை அமைக்க பரிசீலிப்பதை விரும்பலாம். இத்தகைய சமூக உரையாடல் வகை தொடங்கப்பட்டுள்ள சாதாரண பின்ஏற்பு முறைகளுக்காக தேவையற்று காத்து இருக்காமல் நேரடியாக நடைபெறும்.

மீன்பிடிப்பில் பணி மரபு முற்றிலும் அரசு அலுவலர் மற்றும் சட்டமியற்றுவர்களுக்கு சார்பாக உள்ளது அல்ல.

மரபின் புத்தகப்பகுதி முழுவதும், அரசு கலந்தாய்வை மேற்கொள்ள வேண்டிய முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. மரபால் நேரடியாக பாதிக்கப்படும் அவர்கள், அதனைச் செயல்படுத்துவது பற்றி விவாதிக்கும் வாய்ப்பை பெறுகின்றனர் என்பது உறுதி செய்யப்பட வேண்டும். கலந்தாய்வு முறையை மரபு வரையறுக்கிறது. வேலைக்கு அமர்த்துவோர் மற்றும் இத்தகைய நிறுவனங்கள் இருக்கும் இடங்களில் தொழிலாளர் நிறுவனங்கள், குறிப்பாக மீன்பிடிகலன் உரிமையாளர் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மீன்பிடிப்போர் ஆகியோரை ஈடுபடுத்த வேண்டும்.

கலந்தாய்வு மற்றும் செயல்படுத்தும் முறைகளை ஒருங்கிணைக்கும் பணிக்காக, தகுதியான அங்கீகாரம் உடையவர் அல்லது அங்கீகாரம் உடையவர்களை நியமிக்க மரபு அரசை கேட்டுக் கொள்கிறது. தேசீய மற்றும் உள்ளூர் அளவில் மீன்வளப் பிரிவில் தொடர்புடைய அங்கீகாரம் உடையவர்களை ஒருங்கிணைக்க நுட்பம் ஒன்று நிறுவப்பட வேண்டும். தொழிலாளர், மீன்வளம் மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்றவற்றிற்கு பொறுப்பான நிறுவனங்களைப் பிறவற்றுடன் இது உள்ளடக்க வேண்டும்.



# மரபு எவ்வாறு திறன் உடையதாகும்



மீன்பிடிப்பு மரபில் பணியை உறுதி செய்யும் நாடுகள் அவற்றின் கொடிகளை பறக்கவிடும் மீன்பிடிகலன்கள் மரபின் ஏற்பாடுகளுக்கு இணக்கமாக இருக்கும் என்பதை உறுதி செய்யும். இதற்கு தேவைப்படுவது பொருத்தமான ஆய்வு அமைப்புகள் "அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்" மூலமாக இப்பணியில் உதவலாம். நிலை குறித்த புகார்களை உதாரணமாக மீன்பிடிப்பவர்களிடமிருந்து பெறப்படுவது, விசாரிக்க முறைகள் தேவைப்படுகின்றன.

மரபை உறுதிப்படுத்தும் நாடுகள், அவற்றின் துறைமுகத்திற்கு வரும் அந்நிய மீன்பிடிகலன்களை ஆய்வு செய்யலாம் என குறிப்பிடுகிறது. (மரபை உறுதி செய்யாத நாட்டின் கலன்களையும்) மீன்பிடிப்பவர்களின் பாதுகாப்பு மற்றும் உடல் நலத்திற்கு இன்னல் விளைவிக்கும் நிலை கலனில் இருந்தால் கலனை நிறுத்தி வைக்கலாம் ("துறைமுகநாடு கட்டுப்பாடு").

மீன்பிடிகலன் உரிமையாளர்கள் பயன் பெறுவதற்காக மரபு செயலாற்றுகிறது. மரபு நிபந்தனைகளுக்கு இணக்கமாக இருப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டதை தெரிவிக்கும் ஆவணத்தை பெரிய மீன்பிடி கலன்கள் கலனில் கொண்டு செல்லலாம். இக்கலன்கள் அந்நிய துறைமுகங்களுக்குச் செல்லும் பொழுது, இத்தகைய ஆவணம் கலனில் இருப்பது செய்முறைகளை மேலும் நேர்மையானதாக்கும்: மரபை உறுதி செய்த நாட்டின் கொடியை பறக்க விடும் மீன்பிடி கலனின் உரிமையாளருக்கு இது ஒரு நன்மையாகும்.

# மேல் விபரங்கள் எங்கு கிடைக்கும்

பதொநிறுவனத்தின் பகுதி நடவடிக்கைகளுக்கான பிரிவால் இச்சிறுவெளியீடு தயாரிக்கப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறு பகுதிகளின் (உ.ம். மீன்பிடிப்பு, சுரங்கப்பணி, விவசாயம், கட்டுமானப்பணி) அனைத்து வகையான பணிகளையும் மையப்படுத்துகிறது.

பதொநி இணையதளப்பக்கங்களில் மேல் விபரங்கள் உடனடியாக கிடைக்கும்: http://www.ilo.org/public/english/dialogue/sector/sectors/mariti/fishing-iloact.htm

அல்லது, மிகவும் எளிதாக பயன்படுத்த: www.ilo,org.sector(then click on “Shipping;ports;fisheries; inland waterways” in the left column).

பதொநிறுவன தலைமை அலுவலகத்தில் மீன்பிடிப்பிற்காக குறிப்பிட்ட பொறுப்புகளுடன் உள்ள பணியாளர்களின் விபரங்கள் இங்கு கிடைக்கும். இந்த அலுவலர்கள் உங்களுக்கு நேரடியாக உதவலாம் அல்லது மரபு மற்றும் பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ள குறிப்பான பிரச்சினைகளுக்கான வல்லுநர்களுடன் உங்களை தொடர்பு படுத்தலாம்.

மரபு மற்றும் பரிந்துரையின் புத்தகப்பகுதி கிடைக்கும் இணையதளம்: www.ilo.org/normes.

உலகின் அனைத்து மண்டலங்களிலும் உள்ள பதொநிறுவன களப்பணியாளர்கள், வல்லுநர் தொழில் நுட்ப பணியாளர்களுடன் உங்களுக்கு உதவுவர். மண்டல அலுவலகங்களின் முழுமையான பட்டியல் கிடைக்கும் இணைய தளம்:

http;//www.ilo.org/global/Departments_Offices/lang-en/index.htm

*Tamil translation by Dr M Paramasivam*

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*2009*

**Bay of Bengal Programme**
**Inter-Governmental Organisation**
91, Saint Mary’s Road, Abhiramapuram,
Chennai - 600 018, Tamil Nadu, India
Tel: +91-44-24936294, 24936188; Fax: +91-44-24936102
Email: info@bobpigo.org; website: www.bobpigo.org





*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*2009*

வகைப்படுத்தப்பட்ட  நடவடிக்கைகளுக்கான பிரிவு
சமூக விவாதம், தொழிலாளர் சட்டம், தொழிலாளர் நிர்வாகம் மற்றும்  நடவடிக்கைகளுக்கான பிரிவு
பன்னாட்டு தொழிலாளர் அலுவலகம்
4, ரூட் டெஸ் மரிலான்ஸ் – சி.எச். 1211 ஜெனிவா 22
சுவிட்ஸர்லாந்து
தொலைபேசி: + 41 22 799 7501
தொலைஅச்சு: + 41 22 799 7050
மின்அஞ்சல்: sector@ilo.org
www.ilo.org

978-92-2-1208693
12/2007
புகைப்படங்கள்: பதொநி கடல்சார் மற்றும் மீன்வள அமைச்சகம், கொரியா குடியரசு ரேனி, லுப்பொர்ஜின்க்,
க்லாஸ்லிங்பெக்வான்க்ரானென்– ஜோகப்   வடிவமைப்பு www.paprika-annecy.com